**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051853

1. District மாவட்டம் : கிருஷ்ணகிரி — PS: காவல்நிலையம்: ஊ.த.க. பிரிவு — Year: ஆண்டு: 2020 — FIR No.: மு.த.அ. எண்: 15/AC/2020 — Date: நாள்: 18.12.2020

2. (i) Act சட்டம்: 2018-ல் திருத்தியமைக்கப்பட்ட — Sections பிரிவுகள்: 7 and 12 r/w 7
   (ii) Act சட்டம்: 1988-ஆம் ஆண்டின் ஊழல் — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: தடுப்புச் சட்டம். — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் — Date to : நாள் வரை 18.12.2020
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை அதிகாலை 03.00 மணிக்கு முன்பு
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் — Time : நேரம் 18.12.2020 - 08.00 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — தன்னிச்சையாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 55 கி.மீ வடக்கு
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி போக்குவரத்து துறை சோதனைச்சாவடி (உள்வழி), சிப்காட், ஜூஜூவாடி, ஓசூர்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ஜே.கே. கிருஷ்ணராஜன் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. வேட்ராயன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 48 — (d) Nationality : நாட்டினம் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் காவல் துறை கண்காணிப்பாளர் — (g) Address : முகவரி காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம், ஊ.த.க. பிரிவு, கிருஷ்ணகிரி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திருமதி. A. வசந்தி (47), மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-I), போக்குவரத்து துறை சோதனைச் சாவடி (உள்வழி), சிப்காட், ஜூஜூவாடி, ஓசூர்.
   2) திரு. R. முருகன் (55), அலுவலக உதவியாளர், போக்குவரத்து துறை சோதனைச் சாவடி, (உள்வழி), சிப்காட், ஜூஜூவாடி, ஓசூர்.
   3) திரு. A. அமர்நாத் (25), த/பெ. அமிர்தராஜ், எண். 168/1, பழைய மதிகிரி, ஓசூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டவருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

18/12/20

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டவர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

18/12/20

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
18.12.2020 - 09.00 மணி

Name: பெயர் [illegible]
Rank: நிலை .................... No. எண்
[illegible]
[illegible]

**கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 15/AC/2020 U/s 7 and 7 r/w 12 of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண் 12 ன் தொடர்ச்சி**

18.12.2020 ஆம் தேதி அதிகாலை 03.00 மணியளவில் நான் கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் அலுவல் பணி முடித்து, ஜுஜுவாடி வட்டார போக்குவரத்து உள்வழி சோதனை வாசடி அருகே மேற்படி சோதனை சாவடியை கடந்து சென்றபோது வணிகவரி ஆவணங்கள் இருப்பு குடோனுக்கு நேர் எதிரே சாலையில் வைத்து இரண்டு நபர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டு சாலையை மறித்துக்கொண்டிருந்தனர். நான் அவர்களை விசாரிக்க, அதில் ஒரு நபர் இந்தியில் பேசினார். அவரிடம் காவல் குழுவில் இந்தி தெரிந்த காவலர் 1901 திரு.ஆர்.நரேஷ்குமார் என்பவர் மூலம் அந்த நபரைபற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் கமல் கிஷன் சர்மா என்றும், தான் லாரி ஓட்டுனராக பணிபுரிந்து வருவதாகவும், ஆந்திராவிலிருந்து KIA மோட்டார்ஸ் நிறுவனத்தின் கார்களை ஏற்றிக்கொண்டு சேலம் மாவட்டத்திற்கு எடுத்து செல்வதாகவும், இன்று தான் சோதனை சாவடியை கடக்கும் போது மோட்டார் வாகன ஆய்வாளருக்கு பணம் கொடுத்துவிட்டுதான் செல்லவேண்டும் என்று தெரிவிப்பதாக கூறினார். பின்னர், நான் மற்றொரு நபரை விசாரிக்க, அவர் தனது பெயர் அமல்ராஜ் என்றும், தான் மேற்படி சோதனை சாவடியில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளருக்கு உதவியாகவும், வெளிமாநிலத்திலிருந்து சோதனை சாவடியை கடக்கும் வாகனங்களை நிறுத்தி அவர்களிடமிருந்து பணம் பெற்று மோட்டார் வாகன ஆய்வாளருக்கு தரும் பணியை செய்து வருவதாகவும் தெரிவித்தார். எனவே இது போன்று பல வாகன ஓட்டுனர்களிடமிருந்து மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் கையூட்டு பணம் கேட்டு பெற்று வைத்திருக்க கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் நான் மேற்படி நபர்களை அழைத்துக்கொண்டு அரசு சாட்சிகள் மற்றும் காவலர் குழுவுடன் மேற்படி சோதனை சாவடியினுள் நுழைந்தபோது, அங்கு தெற்கு முகம் பார்த்தவாறு இருக்கையில் சீருடையில் அமர்திருந்த ஒரு பெண்ணிடம் நான், அரசு சாட்சிகள் சூளகிரி தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.ஜெ.வெற்றிவேல், பேரிகை உள்வட்ட வருவாய் ஆய்வாளர் திரு.ஆர்.முருகேசன் மற்றும் காவலர் குழுவுடன் அறிமுகம் செய்துகொண்டு, மேற்படி அரசு சாட்சிகளின் முன்னிலையில் 18.12.2020 ஆம் தேதி அதிகாலை 03.30 மணி முதல் காலை 06.00

மணி வரையில் அந்த உள்வழி சோதனை சாவடியை என்னால் ஒரு திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்த திடீர் தணிக்கையின் போது உதவியாளர் திரு.ஆர்.ராமலிங்கம் அவர்களால் அரசு கணக்கில் பல்வேறு தலைப்புகளின் கீழ் 17.12.2020 ஆம் தேதி காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரையில் வசூல் செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.4,59,840/- என்றும், இரவு 8 மணி முதல் 18.12.2020 ஆம் தேதி அதிகாலை வரையில் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.15,14,405 என்றும் ஆஜர்படுத்தினார். மேற்படி தொகை அரசு சாட்சிகளால் சரிபார்க்கப்பட்டு, அரசு கணக்கில் வரவு வைக்கும் பொருட்டு, உதவியாளர் திரு.ஆர்.ராமலிங்கம் அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பிறகு மேற்படி அலுவலகத்தின் கிழக்கு பக்க அறையிலிருந்த ஒரு நபரை நான் விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.ஆர்.முருகன் என்றும், தான் மேற்படி அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை விசாரிக்க, அவர் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.எ.வசந்தி அவர்கள் தன்னிடம் மூன்று தவணையாக கொடுத்த மொத்த பணம் ரூ.1,30,000/- ஐ கொடுத்து உள்ளே வைக்கசொன்னதன் பேரில் தான் மேற்படி பணத்தை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஓய்வு அறையில் உள்ள படுக்கைக்கு கீழே வைத்துள்ளதாக தெரிவித்தார். மேற்படி பணம் ரூ.1,30,000/- ஐ பற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.எ.வசந்தி அவர்களிடம் நான் விசாரிக்க, அந்த பணம் வாகன ஓட்டுனர்களிடமிருந்து கையூட்டாக பெறப்பட்ட பணம் என்ற விவரத்தினை தெரிவித்தார். மேற்படி பணம் வாகன ஓட்டுனர்களால் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.எ.வசந்தி அவர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் அந்த பணம் மகஜரில் என்னால் கைப்பற்றப்பட்டது. பிறகு மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.எ.வசந்தி அவர்களை நான் மேலும் விசாரிக்க, அவர் தானாக முன்வந்து வாகன ஓட்டுனர்களால் கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் ரூ.41,000/- ஐ அந்த அலுவலகத்தின் மத்திய அறையில் தனது இருக்கைக்கு பின்புறம் உள்ள தெற்கு முகம் பார்த்தவாறு அமைந்திருந்த கணினி மேசையில் இருந்த CPU ற்கு அடியிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் வாகன ஓட்டுனர்களால் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.எ.வசந்தி அவர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் அந்த பணம் மகஜரில் என்னால் கைப்பற்றப்பட்டது. பிறகு அந்த அலுவலகத்தின் மத்திய அறையில் மோட்டார் வாகன ஆய்வாளர்

இருக்கைக்கு எதிரே இருந்த மேசையின் மீதிருந்த அட்டைபெட்டியை அரசு சாட்சிகளின் முன்னிலையில் தணிக்கை செய்ததில், அதில் பணம் இருந்தது. அதை அரசு சாட்சிகளின் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் அதில் மொத்தம் ரூ.83,040/- இருந்தது. அதைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளரிடம் விளக்கம் கேட்க, அந்த பணம் வாகன ஓட்டுனர்களிடமிருந்து கையூட்டாக பெறப்பட்ட பணம் என்ற விவரத்தினை தெரிவித்தார். மேற்படி பணம் வாகன ஓட்டுனர்களால் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.எ.வசந்தி அவர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் அந்த பணம் மகஜரில் என்னால் கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமாக 18.12.2020 ஆம் தேதியன்று அதிகாலை 03.30 மணி முதல் அதிகாலை 06.00 மணிவரையில் என்னால் ஒரு செயல்முறை நடவடிக்கை தயார் செய்யப்பட்டது. அதன் நகலை மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.எ.வசந்தி அவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. பிறகு கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ,2,54,040/- உடன் அலுவலகத்திற்கு வந்து பொது ஊழியரான மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.எ.வசந்தி அவர்கள் வாகன ஓட்டுனர்களுக்கு தனது அலுவல் பணியை முறையற்ற வகையிலும், நேர்மையற்ற முறையிலும் செய்து கொடுத்தமைக்காக அவர்களிடமிருந்து கையூட்டாக பணம் பெற்றுக்கொண்ட குற்றத்திற்காக இன்று 18.12.2020 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 15/AC/2020 U/s 7 of the Prevention of Corruption act 1988 as amended in 2018 ன்படியும், மேலும் பொது ஊழியரான மேற்படி சோதனை சாவடியின் அலுவலக உதவியாளர் திரு.ஆர்.முருகன் அவர்கள் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.எ.வசந்தி அவர்கள் வாகன ஓட்டுனர்களிடமிருந்து பெறப்பட்ட கையூட்டு பணத்தை மறைத்துவைக்க உடந்தையாக இருந்ததற்காக அவர்மீது U/s 7 r/w 12 of the Prevention of Corruption act 1988 as amended in 2018 மேலும், பொது ஊழியரான மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.எ.வசந்தி அவர்கள் வாகன ஓட்டுனர்களிடமிருனந்து கையூட்டாக பணம் பெறுவதற்கு தனி நபரான திரு.அமல்ராஜ் அவர்கள் தூண்டியதற்காக அவர் மீது 7 r/w 12 of the Prevention of Corruption act 1988 as amended in 2018 ன்படியும் குற்றவழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை கிருஷ்ணகிரி மாவட்ட சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பினேன்.

18/12/20

DSP

Krishnagiri V&AC